**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.111/2018</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | யுவசங்கர் | தந்தை பெயர் | : | பெரியசாமி |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 25.08.2025

**D.W. : 1**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது தரப்பில் பிவாசாஆ.1 ஆக எனது அப்பா எழுதிய உயிலை தாக்கல் செய்துள்ளேன். பிவாசாஆ.1 க்கு முன்பு இரண்டு உயில்கள் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரிந்து இல்லை. பிவாசாஆ.1 உயிலில் பழைய உயில்களை ரத்து செய்துவிட்டதாக வாசகம் உள்ளது. அதனால் பழைய உயில்கள் உள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை.

பிவாசாஆ.1 ஐ படித்துப் பார்த்து அதை தெரிந்து கொண்டேன். பிவாசாஆ.1 அசல் உயில் என் கைவசம் எப்படி வந்தது என்றால் என் அப்பாதான் 2005 ல் என்னிடம் கொடுத்தார். பிவாசாஆ.1 ல் முந்தைய உயில் இருப்பதாக வாசகம் உள்ளதை தெரிந்த பிறகாவது முந்தைய உயிலின் நகலை எடுத்துப் பார்த்தேனா என்றால் இல்லை. பிவாசாஆ.1 உயிலை எழுதியதாக கூறும் சமயத்தில் என் அப்பாவிற்கு 82 வயதிற்குமேல் இருக்கும். என் அப்பா 1919 ஆம் ஆண்டு வாக்கில் பிறந்தார். அவர் பிறந்த வருடம் சரியாக தெரியாது. உயில் எழுதியதாக சொல்லும் சமயத்தில் என் அப்பா வயோதிகத்தால் மற்றவரின் உதவியோடு இறந்தாரா என்றால் இல்லை, இறக்கும்வரை என் அப்பா நல்ல திடகாத்திரமாக இருந்தார். பிவாசாஆ.1 உயில் எழுதியதாக கூறும் சமயத்தில் என் அப்பா 82 வயதிற்கு மேலும் நல்ல திடகாத்திரமாக இருந்ததைக் காட்ட வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிவாசாஆ.1 உயில் பதிவு செய்யப்பட்ட போது சார்பதிவாளர் அலுவலகத்தில் யார், யார் இருந்தார்கள் என்று தெரியாது. இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்த வாசாஆ.10 மற்றும் வாசாஆ.11 உயில்களைப் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனது எதிர்வழக்குரை பத்தி 12 ல் பிவாசாஆ.1 உயிலைப் பற்றி என் சகோதர, சகோதரிகளுக்குத் தெரியும் என்று கூறியுள்ளேன். அதே பத்தியில் அந்த விபரம் வாதிகளுக்கு தெரியாது என்று கூறியுள்ளேன் என்றால் வாதிகளுக்கு அந்த விபரம் முதலில் தெரியாது, பின்னிட்டு தெரியும். வாதிகள் எனது அப்பாவின் சஷ்டிபூஜை 2006 ல் நடந்தது. அதற்கு வாதிகள் வந்திருந்தார்கள். அப்போது அந்த உயிலை தெரிந்து கொண்டார்கள். வாதிகளுக்கு பிவாசாஆ.1 உயில் இருப்பதே தெரியாது

என்றால் சரியல்ல. வாதிகளுக்கு இந்த உயில் பற்றிய விபரத்தை தெரிவிக்கவோ அல்லது அவர்களுக்கு அது தெரியும் என்பதற்கோ வேறு அறிவிப்போ அல்லது வேறு ஆவணமோ அனுப்பியதைக் காட்ட தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிவாசாஆ.1 உயிலில் யார் சாட்சி போட்டுள்ளார்கள் என்பதைப் படித்துப் பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த சாட்சிகள் யார், யார் என்றால் இரண்டு பேருமே கிருஷ்ணமூர்த்திதான். இனிசியல் சரியாக தெரியவில்லை. அந்த இரண்டு சாட்சிகளும் யார் என்று இப்போது வரை எனக்கு தெரியாது. அவர்கள் எனது அப்பாவின் உறவினர்களா, நண்பர்களா என்று தெரியாது. பிவாசாஆ.1 உயிலில் நான் இந்த உயிலை இந்த சாட்சிகள் முன்னிலையில் எழுதுகிறேன் என்று அவர்களது பெயரைக் குறிப்பிட்டு வாசகம் உள்ளதா என்றால் அதுபோல் இல்லை. பிவாசாஆ.1 உயிலிலும், வாசாஆ.11 உயிலிலும் 2 வது பக்கங்களில் 3 வது பத்தியில் உள்ள விபரங்கள் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சாட்சி இரண்டு ஆவணங்களையும் பார்த்துவிட்டு ஆமாம் என்று கூறுகிறார். பிவாசாஆ.1 உயிலில் உள்ள பல சங்கதிகள் வாசாஆ,11 ல் கண்ட சங்கதிகளை அப்படியே நகல் எடுத்து பேஸ்ட் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பிவாசாஆ.1 உயிலில் முந்தைய உயிலை எதற்காக ரத்து செய்தார் என்று குறிப்பிட்ட காரணத்தை என் அப்பா கூறியுள்ளாரா என்றால் அவ்வாறு படித்ததாக ஞாபகமில்லை. பிவாசாஆ.1 உயில் ஒரு வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் அதுபற்றி தெரியாது. பிவாசாஆ.1 உயில் என் கைக்கு வந்தபிறகு படித்துப் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். பிவாசாஆ.1 உயிலில் எனக்குத் தான் அதிகப்படியான சொத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்

தந்தையிடம் நான் வேலை பார்த்ததால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. எனக்கு ஜோரெக்ஸ் மற்றும் சகாயராஜ் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. பிவாசாஆ.1 உயிலில் தில்லைநகர் சொத்தைத் தவிர மற்ற சொத்துக்களைப் பொறுத்து எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். என் அப்பா, அம்மாவின் எல்லா சொத்துக்களையும் பொறுத்து சொல்லப்படாததால் பிவாசாஆ.1 உயில் முழுமையானது கிடையாது என்றால் சரியல்ல. பிவாசாஆ.1 உயில் உண்மையானது என்று பரிகாரம் கேட்டு வேறு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது எதிர் வழக்குரையில் பிவாசாஆ.1 ன் உண்மைத்தன்மையை தேவைப்பட்டால் நிரூபணம் செய்கிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிவாசாஆ.1 உயில் எனக்கும், எனது சகோதரர்களுக்கும் வருகிறது எனும் நிலையில் வாதிகளை சொத்திலிருந்து காலி செய்ய இந்த வழக்கு போடுவதற்கு முன்பே நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் என்னவென்றால் எனது மூத்த அண்ணன் ராமசுப்ரமணியன் இந்த இடத்தில் 2001 லிருந்து வசித்து வந்தார். 2006 ல்தான் வாதிகள் அங்கு வந்தார்கள்.

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.